**பத்திரிக்கைச் செய்தி**

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் – திருநெல்வேலி பிரிவு.

**கல்லிடைகுறிச்சி SDAT ஸ்டேடியத்தில் இலவச கோடை கால பயிற்சி முகாம்**

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் திருநெல்வேலி பிரிவின் கீழ் செயல்பட்டு வரும், கல்லிடைகுறிச்சி SDAT விளையாட்டு அரங்கத்தில் கீழ்கண்ட விவரப்படி கோடை கால பயிற்சி முகாம் நடைபெறவுள்ளது.

**5 நாட்கள் உலகத் திறனாய்வு திட்ட கோடை கால பயிற்சி முகாம்**

இப்பயிற்சி முகாமானது 6,7,8 வகுப்புகள் படிக்கும் மாணவ, மாணவியர்களுக்கு பிரத்யேகமாக 22.04.2017முதல் 26.04.2017 வரை தினமும் காலை 6.15 மணி முதல் காலை 8.30 மணி வரை நடைபெறவுள்ளது. இப்பயிற்சி முகாமில் அடிப்படை விளையாட்டுத் திறனுக்கான Speed, Strength, Endurance, Flexibility and Combine Motor Qualities ஆகியவற்றை மேம்படுத்த அறிவியல் அடிப்படையிலான பயிற்சிகள் அளிக்கப்படும்.

**15 நாட்கள் கோடை கால பயிற்சி முகாம் (அனைத்து வயதினருக்கும்)**

இப்பயிற்சி முகாமானது அனைத்து வயதினருக்கும் 1.தடகளம், 2. இறகுப்பந்து, 3. கூடைப்பந்து, 4. குத்துச்சண்டை, 5. கிரிக்கெட், 6. கால்பந்து, 7. வாள்சண்டை, 8. ஜிம்னாஸ்டிக்ஸ், 9.கைப்பந்து, 10. ஹாக்கி, 11. டேக்வாண்டோ, 12. வாலிபால், 13. பளுதூக்குதல், 14.கபாடி, 15. மேசைப்பந்து, 16. டென்னிஸ், 17. ஜீடோ, 18. ஸ்குவாஷ் மற்றும் 19. வில்வித்தை ஆகிய விளையாட்டுக்களுக்கு பிரத்யேகமாக பயிற்சி முகாம் 25.04.2017 முதல் 09.05.2017 வரை மாலை 3.30 மணி முதல் 6.00 மணி வரை நடைபெறவுள்ளது. நுழைவு கட்டணம் இல்லை. இலவசமாக பயிற்சி முகாமில் அனைத்து வயதினரும் கலந்து கொள்ளலாம்.

**இது சம்பந்தமான முன் ஆலோசனைக் கூட்டம் மண்டல முதுநிலை மேலாளர் திருநெல்வேலி மண்டலம் திரு.ப.சிவகுமார் அவர்கள் தலைமையில் 10.04.2017 அன்று மாலை 03.30 மணிக்கு கல்லிடைகுறிச்சி SDAT ஸ்டேடியத்தில் வைத்து, மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் முனைவர்.க.சேவியர் ஜோதி சற்குணம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

இப்பயிற்சி முகாமில் தினமும் மாணவ, மாணவியர்களுக்கு சத்தான பால் / பானம் இப்பயிற்சி முகாமின் நிறைவு நாள் அன்று அனைவருக்கும் சான்றிதழ்கள் வழங்க வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

கல்லிடைகுறிச்சி கூட்டத்தில், உடற்கல்வி ஆசிரியர்கள் திரு. கிருஷ்ணன், திலக் வித்யாலயா மேல்நிலைப்பள்ளி, திரு. சிதம்பரம் AVRMV மேல்நிலைப்பள்ளி, திரு. M. மணிகண்டன் திலக் வித்யாலயா மேல்நிலைப்பள்ளி, திரு.கணேசன் சிலம்பம் ஆசிரியர், திரு. ராஜகோபால் கல்லிடைகுறிச்சி SDAT விளையாட்டரங்க பொறுப்பாளர் மற்றும் திருமதி.முருகேஸ்வரி ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

மேற்கண்ட தகவலை திருநெல்வேலி மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் தெரிவித்தார்கள்.

ஒம்/–

மாவட்ட விளையாட்டு மற்றும்
இளைஞர் நலன் அலுவலர்
திருநெல்வேலி